# விவசாய தொழில்நுட்பத் தகவல்

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு.**

**தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 50 - 2021 ஜுலை**


## புதுப்பிக்கப்பட்ட வானிலை முன்னறிவிப்பு
## ௨௦௨௧ ஆம் வருட சிறுபோகத்தின் எஞ்சிய காலத்திற்கு

உலர் மற்றும் இடை வலயங்களில் பயிரிடப்பட்டுள்ள சிறு போக நெல் மற்றும் மானாவரி மேட்டு நில பயிர்களின் அறுவடைக் காலம் ஜுலை இறுதியிலிருந்து ஆகஸ்ட் நடுப்பகுதி வரையாகும். பொதுவான காலநிலை தரவு மற்றும் தற்போதைய சூழல் நிலைமைக்கு ஏற்ப இக் காலப்பகுதியில் நாடு முழுவதும் உள்ள இந்த இரண்டு வலயங்களிலும் வரட்சியான காலநிலை காணப்படுகின்றது.

எனினும் மாறும், வேறுபடும் காலநிலையால் பசுபிக் சமுத்திரத்தில் உருவாகும் போலி தென்மேல் பருவ சுழற்சி காரணமாக சூறாவளி உருவாகுமாயின் ஈர வலயத்தில் சில நாட்களுக்கு மழையை எதிர்ப்பார்க்கலாம். அவ்வாறு நிகழுமாயின் 2 – 3 நாட்களுக்கு முன்னரே வானிலை அவதானிப்பு திணைக்களத்தால் அறிவிக்கப்படும். ஆகவே ஈர வலயத்தின் பயிர்ச் செய்கையாளர்கள் அறுவடையின் போது வானிலை அவதானிப்பு திணைக்களத்தின் குறுகிய மற்றம் நடுத்தர எல்லை எதிர்வுகூறல்களின் சிபாரிசுகள் குறித்து அவதானமாக இருப்பது பாதுகாப்பானதாகும்.

உலர் மற்றும் இடை வலய வயற் பயிர்களின் அறுவடையின் உச்சம் ஆகஸ்ட் முற்பகுதியிலிருந்து நடுப்பகுதி வரையான காலத்தில் மேற்கொள்ளப்படுவதால் அறுவடை இயந்திரங்களின் கிடைப்பில் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே விவசாயிகள் தமது முதிர்ச்சியடைந்த வயல்களை நேர காலத்துடன் அறுவடை செய்ய கோரப்படுகின்றனர்.

**மூன்றாம் போகப் பயிர்ச் செய்கை**

சிறு போக வயல்களை அறுவடை செய்த பின்னர் வயலில் எஞ்சியுள்ள ஈரப்பதனைப் பயன்படுத்தி மூன்றாம் போக பயிர்ச் செய்கையாக குறுகிய காலப் பயிர்களான பாசிப் பயறு போன்ற அவரைப் பயிர்களை பயிரிட விவசாயிகள் கோரப்படுகின்றார்கள். MI – 6 மற்றும் MI – 7 என்பன இதற்குப் பொருத்தமான வர்க்கங்கள் ஆகும். ஆகஸ்ட் நடுப்பகுதிக்கு முன்னர் நேரடியான விதை விதைத்தலை மேற்கொண்டால் விதைத்து 55 – 65 நாட்களில் அறுவடை செய்யலாம். இந்த இடை காலத்தில் குறைந்தது 02 தடவைகள் பாசிப்பயறை அறுவடை

செய்யலாம். மிகுதியாக உள்ள பயிர் மீதிகள் நன்கு நிலத்தில் தாழும் வகையில் உழுவதன் மூலம் அடுத்த பெரும் போகத்தை ஆரம்பிக்கலாம். பயிர் செய்யப்பட்ட காலத்தில் நீண்ட வரட்சியான காலம் காணப்படுமாயின் நீர்பாசன அதிகாரிகளுடன் கலந்துரையாடி போதுமானளவு நீர் தொட்டியில் இருக்குமாயின் பயிரை பராமரிக்கத் தேவையானளவு நீரை தொட்டியில் இருந்து பெற்றுக் கொள்ளவும்.


**பிரதியாக்கம்** :- கலாநிதி பீ.வீ.ஆர். புண்யவர்தன – தலைமை விவசாய வானிலை விஞ்ஞானி, விவசாயத் திணைக்களம்

**தமிழாக்கம்** : - ஐ.எம்.எஸ். ஹலிம்தீன்

**கணணி வடிவமைப்பு :-** லிசோதா செல்வராஜ்

மேற்பார்வை மற்றும் ஆலோசனை : டப்ளிவ்.எல். ஹிரான் பீரிஸ் (பணிப்பாளர்- தகவல். தொடர்பாடல்)

: ஐ.எம்.எஸ். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்)